DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: Crmp.No.1786/2024**

**witness: PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | நாகேந்திரன் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>15.04.2024</u>
<u>முதல் விசாரணை:-</u>

நான் 2012 ல் சர்வே எண்.627/682-1 ல் ஒரு இடம் வாங்கினேன். 2013 ல் எனது பெயரில் பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்தேன். விசாரித்துவிட்டு 16.07.2013 ம் தேதி ஆய்வாளர் வட்டாட்சியர் அலுவலகத்தில் அறிக்கை தாக்கல் செய்தார். அதன் அடிப்படையில் 21.11.2013 ம் தேதி எனது பெயரிலும், ஹரிஹரன் பெயரிலும் பட்டா உத்தரவு ஏற்பட்டது. அந்த பட்டா உத்தரவில் இராமேஸ்வரம் VAO க்கு copy அனுப்பப்பட்டதாக உத்தரவு உள்ளது. நான் 10(1) கேட்டு VOA விடம் சென்றேன். கொடுக்க முடியாது என்று அனுப்பி விட்டார். அதோடு நான் இராமேஸ்வரம் தாசில்தாரிடம் எனக்கு கொடுத்த பட்டாவை வைத்து 10(1) வேண்டும் என்று தாசில்தாரிடம் மனு கொடுத்தேன். தாசில்தார் 10(1) கொடுக்க சொல்லி நான் கொடுத்த மனுவிலேயே எழுதிக்கொடுத்தார். அதை வாங்கிவிட்டு பதிவு செய்ய முடியாது 10(1) தரமுடியாது என்று VAO ரொட்ரிக்கோ சொல்லிவிட்டார். அதன்பின்பு RDO

விற்கு ஒரு புகார் அனுப்பினேன். அந்த புகாரில் நடவடிக்கை எடுக்க சொல்லி உத்தரவு போட்டார். அதன் நகல் எனக்கும், வட்டாட்சியருக்கும் அனுப்பினார். நடவடிக்கை எடுக்காததால் கலெக்டரிடம் மனு கொடுத்தேன். அதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாசில்தாரிடம் மறுபடியும் மனு கொடுத்தேன். விசாரணைக்கு கூப்பிடுவதாக எனக்கு தகவல் வந்தது. அதில் ஆஜரானேன். என்னை விசாரிக்கவில்ல நாளைக்கு வாருங்கள் என்று சொல்லிவிட்டார்கள். நான் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று தாசில்தாருக்கு மனு கொடுத்தேன். பதில் வந்ததில் எனக்கு எழுதிக்கொடுத்த சடையாண்டி மனைவி நம்பு பெயரில் பட்டா இருப்பதாக வந்தது. அதன் அடிப்படையில் தகவல் அறியும் ஆணையருக்கு தபால் அனுப்பி என்னையும், துணை தாசில்தார், அப்போது இருந்த VAO ஆகியோர்களை விசாரித்தார்கள். விசாரித்ததில் எந்தவித உயர் அதிகாரிகளின் உத்தரவு இல்லாமல் VAO ரொட்ரிக்கோ இராமநாதன் என்பவரிடம் கையூட்டு பெற்றுக்கொண்டு எனது பெயரிலும், ஹரிஹரன் பெயரில் உள்ள பட்டாவையும் இராமநாதன் பெயரில் மாற்றிவிட்டார். அதன்அடிப்படையில் அனைத்து ஆவணங்களையும் நான் தாக்கல் செய்துள்ளேன். இதுசம்பந்தமாக இராமேஸ்வரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். சரியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் இராமநாதபுரம் SP க்கு புகார் அனுப்பினேன். அதன்மீதும் எந்த நடவடிக்கையும் இல்லை. அதனால் தான் இந்த தனிப்புகார் மனுவை தாக்கல் செய்துள்ளேன். VAO ரொட்ரிக்கோ மீது சரியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 15.07.2021 ம் தேதி நான் மாவட்ட ஆட்சியரிடம் அனுப்பிய புகார் மனு அசல் மற்றும் ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.1 ஆகும்.

2. 15.07.2021 ம் தேதி நான் வருவாய் கோட்டாட்சியரிடம் அனுப்பிய புகார் மனு அசல் மற்றும் ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.2 ஆகும்.

3. 06.08.2021 ம் தேதியில் மேற்படி மனுவிற்கு வருவாய் கோட்டாட்சியர் எனக்கு அனுப்பிய குறிப்பாணை ம.சா.ஆ.3 ஆகும்.

4. 15.07.2021 ம் தேதியில் வட்டாட்சியருக்கு அனுப்பிய புகார் மனு மற்றும் ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.4 ஆகும்.

5. 06.08.2021 தேதியில் மேற்படி மனுவிற்கு வட்டாட்சியர் எனக்கு அனுப்பிய குறிப்பாணை ம.சா.ஆ.5 ஆகும்.

6.19.07.2022 தேதியில் நகர் காவல் நிலையத்தில் அனுப்பிய புகார் மனு மற்றும் ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.6 ஆகும்.

7. 05.08.2022 ம் தேதியில் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு ம.சா.ஆ.7 ஆகும்.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.